# பத்திரிக்கை செய்தி

## ஓய்வுகால பணபலன்களுக்கான பட்டியல் தயார் செய்ய ரூ.30,000/- லஞ்சம் வாங்கிய முத்திரை ஆய்வாளர் கைது

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, முத்திரை ஆய்வாளர் அலுவலகத்தில் முத்திரை பணியாளராக திரு.ப.நாகராஜன் என்பவர் பணிபுரிந்து வருகிறார். அவர் வரும் 30.04.2025 ஆம் தேதி வயது மூப்பின் காரணமாக ஓய்வில் செல்ல உள்ளார். மேற்படி நபரின் ஓய்வுகால பணபலன்களுக்கான பட்டியல் தயார் செய்து பெற்று வழங்குவதற்கு ஓசூர் முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வன் அவர்கள் புகார்தாரர் திரு.ப.நாகராஜன் அவர்களிடம் பணம் ரூ.30,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத நாகராஜன் இது குறித்து கிருஷ்ணகிரி மாவட்ட லஞ்ச ஒழிப்பு துறையில் முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வன் மீது நடவடிக்கை எடுக்குமாறு இன்று (04.04.2025) காலை புகார் அளித்துள்ளார். அந்த புகாரின்பேரில் வழக்குப்பதிவு செய்த லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வன் மீது பொறி வைத்து பிடிக்க நடவடிக்கை மேற்கொண்டனர். இதில் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் அறிவுரைப்படி இரசாயனம் தடவிய பணத்தை புகார்தாரர் திரு.நாகராஜன் எடுத்துக்கொண்டு சென்று முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வனை சந்திக்க இன்று (04.04.2025) காலை ஓசூர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அலுவலகத்தில் வைத்து புகார்தாரர் திரு.நாகராஜன், முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வனிடம் இரசாயனம் தடவிய லஞ்ச பணம் ரூ.30,000/-த்தை கொடுத்துள்ளார். அதை பெற்றுகொண்ட தமிழ்ச்செல்வன் அப்பணத்தை வாங்கி தனது இடதுபுற பேண்ட் பாக்கெட்டில் வைத்துக்கொண்டார். அப்போது அங்கே மறைந்திருந்த கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு துறையினர் லஞ்சம் வாங்கிய முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வன் அவர்களை சுற்றி வளைத்து பிடித்தனர். லஞ்ச பணம் மற்றும் சில ஆவணங்கள் ஆகியவற்றை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர். பின்னர் லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக மேற்படி முத்திரை ஆய்வாளர் திரு.செ.தமிழ்ச்செல்வன் அவர்களை கைது செய்து விசாரணை செய்துவருகின்றனர்.